ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஸ்வர்க்காதி லோகங்களில் பரமசுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் தேவர்கள், ரிஷிகள், பிதுருக்கள் முதலியவர்களும் நம் பாரதநாட்டின் பெருமையை பிரமாணமூலமாகத்தெரிந்துகொண்டு இதில் மானிடப்பிறவியையடையவிரும்பி தகுந்த குலத்தைத் தேடுவார்களென்றும், அத்தகைய சிறந்த மானிடப்பிறவியைப்பெற பாக்கியமில்லாவிட்டாலும் புல், பூண்டுகளாயாவது பிறக்கவிரும்புவார்களென்றும் சுருதி முதலியவைகளிலிருந்து தெரியவருகிறது. அது யுக்தமே. ஏனெனில்—நம்பாரத நாடு சிரௌதஸ்மார்த்தாதி கர்மங்களைச் செய்வதற்குச் சிறந்தகர்ம பூமியாகவும், துஷ்டர்களை சிக்ஷிக்கவும், சிஷ்டர்களை இரக்ஷிக்கவும் பல அவதாரங்களைச்செய்த பரமாத்துமாவின் திவ்யகுணங்களிலீடுபட்டு பக்தியுடன் உபாஸனம்செய்ய உயர்ந்த இடமாகவும், ஸத்குருசரணசேவையால் சிரவணமனனாதிஸாதனங்களை அடைந்து ஞானநிஷ்டையால்மோக்ஷமடைய முக்கிய க்ஷேத்திரமாகவும், பதினெட்டு வித்யாஸ்தானங்களிலும் புகழப்படுகின்றதல்லவா? அத்தகைய நம் நாட்டின்பெருமை பூர்வயுகங்களில் பூர்ணமாகவே இருந்தது. இப்பொழுதோ கலிமஹாராஜனது ஸாம்ராஜ்யத்தில் அது கொஞ்சம்கொஞ்சமாய் குறைந்துவிட்டபடியால் தேவாதிகள் இங்கு ஜனிக்கவேண்டிய விருப்பத்தைமாற்றிக்கொண்டதோடுமட்டுமில்லாமல்—தேவசத்துருக்களும் கூட்டம் கூட்டமாக பூலோகத்திலவதரிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். மனிதர், மிருகம், புல், பூண்டு முதலிய ஸகல வஸ்துக்களும் ஸாத்துவிககுணலேசமுமில்லாமல் பெரும்பாலும் ரஜோகுணதமோகுணங்கள் நிறைந்தவைகளாகவே எங்கும் காணப்படுகின்றன. இதுதான் ஆஸுரசம்பத்தின் இலக்ஷணமாம். ஆனால் தற்போது கர்மயோகம் கானகமேகியதுபோல் காணப்படவில்லை. பக்தியோகம் பங்கப்பட்டதுபோல் புலப்படவில்லை. ஞானயோகம் ஒருவருக்கும் ஞாபகத்திற்கு வருவதில்லை. மூன்று காண்டங்களின் பொருளாகிய இம்மூன்று ஸாதனங்களும் முன்போல் நடப்பிலில்லாமையால் மனிதர் ஒரே பிரமாணத்திற்கும், ஒரே தெய்வத்திற்கும், ஒரே குருவுக்கும், கட்டுப்படாமல் தந்தலையாட்டமாய்த் தன்தன் பெருமையையே பெரிதாகப்பாராட்டிக்கொண்டு ஒருவரோடொருவர் சேராமல் தனிதனிக்கூட்டம் போட்டுக்கொண்டு ஒருவரையொருவர் பழிக்கவும் அழிக்கவும் முயலுபவர்களாய் ஆய்விட்டார்கள். அண்ணன் தம்பிகளாயினும் ஒருவரையொத்து ஒருவர் நடக்காமல் பரஸ்பரம் அடித்துக்கொண்டு அழிந்துவிடுவதே அஸுரர்களின் ஸ்வபாவம், ஸுந்தோப ஸுந்தர்களென்ற அஸுர ஸகோதரர்கள் முதலியவர்கள் இதற்கு உதாரணமாவார்கள். பசு முதலியவைகளும் ஸாத்துவிகமான ஸாரத்தையளிக்கவில்லை. கொடி, செடிமுதலிய ஓஷதிவர்க்கங்களும் ஸாத்துவிக வீர்யமுள்ளவைகளாகக் காணப்படவில்லை. எங்குகண்டாலுமிவ்வாறாகக் காலவசத்தாலேற்பட்டுவிட்டாலும் ஆங்காங்குசில பெரியோர்கள் காணப்படுகிறார்கள். அவர்கள் செய்துவரும் கர்மயோகத்திற்காகத்தான் கொஞ்சமாவது மழை மாறிபெய்துகொண்டிருக்கிறது. பயிருக்குப்பாய்ச்சினநீர்—புல்லுக்கும் புசிவதுபோல அவருக்காகப்பெய்யும் மழைமற்றவர்க்குமாகிறது. பாரதபூமியில் பிராம்மணனாகவும், அதிலும் புருஷனாகவும் பிறந்தவன் புனிதமான ஜன்மத்தைப் பாழாகப்போக்காமல் புண்ணியத்தைத்தேடி புருஷார்த்தத்தைப்பெறுவானாக.

100 *　　　சுபம்,　　　பத்திராதிபர்.

# புண்ணியபூமி பாபிகளுக்கிடமாயிற்று

புண்ணிய பூமியான நம் பாரதவருஷத்தில் புண்ணியாத்துமாக்களான பரமரிஷிகளே ஓரோர் காரணவசத்தால் தங்கள் குலத்திலுதித்த குழவிகளிடமே குழந்தைகளாய் வந்து ஓரோர் புண்ணியவழியைப் பிரகாசப்படுத்தி பிராணிகள் கரையேறும்படி செய்தார்கள். தற்காலத்திலோவெனில் கிரஹஸ்தாசிரமத்திற்குப் பூர்வாசிரமமான பிரம்மசரியத்திலேயே நியமங்கள் தவறிவிடுவதால் சரீரங்கெட்டுப்போவது பற்றி பெரியார்வந்து பிறக்கப் புனிதமான இடம் கிடைப்பதில்லை. அதனால்அவர்கள் அவதரிப்பதில்லை. அங்ஙனமே ஆபஸ்தம்பர் தர்மஸூத்திரத்தில்

'स य एवं प्रणिहितात्मा ब्रह्मचारी, अत्रैवास्य सर्वाणि कर्माणि फलवन्ति

''அடா குழந்தாய்! பிரம்மசாரியாய்விட்டாய்-இனி ஜலமல விஸர்க்காதிகளில் சுத்திக்காக ஆசமனம் செய்யக்கடவாய் - உன் ஆசிரமத்திற்குரிய கர்மாவைச்செய் - தூங்காதே-பிக்ஷையெடுத்துண்- ஆசாரியனுக்கு அதீனனாயிரு, என்பதாதியாகக் கூறப்பட்டபடி எந்த ப்ரம்மசாரி ஆசிரியனிடம் ஒப்புவிக்கப்பட்ட சரீரத்தையுடையவனாய் நியமங்களை யனுஷ்டித்து வருவானோ! அவனுடைய எல்லாக்கர்மங்களும் பயனுள்ளவைகளாகும், என்றும்,

"नियमेषु तपश्शब्दः । तदतिक्रमे विद्याकर्म निःस्रवति ब्रह्म सहापत्यादेतस्मात् । कर्तपत्यमनायुष्यं च । तस्मादृषयोऽवरेषु न जायन्ते नियमातिक्रमात् ॥"

''ப்ரம்மசாரிகளுக்குச் சொன்ன 'நியமங்களை தபஸ் என்ற சப்தத்தாலும் சொல்லலாம். அவைகளைச்சரிவர அனுஷ்டிக்காமல் விட்டுப்போட்டு அதிக்கிரமித்தும் நடந்தால் அப்படி நியமந் தவறிச்செய்த வித்தியாக்கிரஹணம் ஓட்டைக்குடத்தில் வைத்த

நீர் ஒழுகிப்போவதுபோல் நியமந்தவறி நடந்த புருஷனிட மிருந்து கிரஹிக்கப்பட்ட வேதமொழுகிப் போகும்படி செய்து விடும். அம்மட்டோடில்லை. அவனது ஸந்ததியிடமிருந்தும் வேதம் விலகி விடும்படி செய்துவிடும். அதாவது ப்ரம்மயக்ஞாதி களில் உபயோகப் படுத்ினாலும் ஒருபயனையுந் தராததாகச் செய்துவிடும். பயனில்லை யென்பது மாத்திரமல்ல. அனர்த்த காமாயுமாய்விடும் அதாவது—நியமந்தவறிக் கற்கப்பட்டவித்யை நரகக்குழியில் அவனை வீழ்த்துவதற்கும் காரணமாய்விடும். ஆயுஸ்ஸையும் குறைத்துவிடும் இப்படி நியமங்களை மீறிவித்தியைக் கற்றதோஷத்தால் கலியுகத்திலுள்ளவர்களிடத்தில் ரிஷிகள் வந்து அவதரிப்பதில்லை என்றும் கூறியுள்ளார். இதனால் புண்ணி யாத்துமாக்கள் பிறக்கவருவதில்லை யென்பதிலிருந்து இப் பொழுது பிறப்பவர்கள் பெரும்பாலும் புண்ணியவான்களைத் தவிர மற்றவர்களென்றேற்படுகின்றது. இவர்கள் தான் ஆசாரத்தைச் சீர்படுத்தக் கிளம்பிவிட்டார்கள். நான்குவேதங் களையும் ஆறு அங்கங்களுடன் ஆசிரியனிடமிருந்து நியமந் தவறாமல் அப்பியஸித்து அதன்படி யனுஷ்டித்துக் கிருதார்த் தாளான கிருதயுக புண்ணியாத்துமாக்கள் நிர்ணயிக்கவேண்டிய விவாஹாதிகளான சிறந்ததர்மங்களை தார்மிகரை யழிக்கத் தலை யெடுத்தவர்கள் தீர்மானிக்கக் கிளம்பிவிட்டது காலத்தின் கோலமேயன்றி வேறில்லை. லௌகிக விஷயங்களில் இவர்கள் எப்படிவேணுமோ அப்படி வைத்துக்கொள்ளட்டும் என்று விட்டு விட்டாலும், அது போராமல் வைதிகவழியிலும் வந்து வழக் கிடுவதுவிபரீத காலலக்ஷணந்தான். ஆகவே அனாதிகாலந்தொட்டு ஆஸேது ஹிமாசலம் பரவிநிற்கும் ஆர்யமதமே அடியோடு அழிந்துபோக வேணுமென்றும், அதுள்ளவரையில் க்ஷேமம் கிடைக்கப் போகிறதில்லையென்றும் வாய் கூசாமல் வாதாடுபவர் களே பெரும்பாலும் பிறப்பதற்குப் பாரதபூமி பிரஸவ அறையாய் விட்டது.

उपकारपरो नित्यमपकारपरेऽप्यरौ ।”

“நித்தியமும் அபகாரமே செய்வதையே பெரியகாரியமாகக் கொண்ட சத்துருவினிடத்தும் எப்பொழுதும் உபகாரம்செய்து கொண்டே இருப்பார் பெரியோர்” என்று கூறப்பட்ட ஸர்வஜன

ஸுஹிருத்துக்களான ஸாதுக்களிடத்தில் இந்தக்கெட்ட எண்ணங்கொண்டவர்களும் எப்படியாவது அந்தகெட்ட எண்ணத்தை மாற்றிக்கொண்டு நல்லபுத்தியடைந்து நல்லகார்யம்செய்து நல்ல ஸ்திதிக்குவருவார்களா என்றுதான் பெரியோர் பாடுபடுகிறார்கள். இவர்களைப்போல் 'விப்ரக்ஷப:' என்று விழித்துக்கொள்வதில்லை. ஆகவே பெரியோர்கள் படும்பாடு வீண்பாடாய்ப்போய்விடாமல் யாரேனுமோர் பெரியாராவது அவதரித்து எல்லோருக்கும் புண்ணியவழியிலேயே புத்திபுகட்டி நம்பாரதபூமி பழையபூமியாகவே ஆகும்படி அனுக்கிரஹிப்பாராக. சுபம்.

பத்திராதிபர்.

---

# விவாஹத்தில் விசேஷம்.

பல விசேஷங்கள் நமது விவாஹ சம்பிரதாயத்தில் உள்ளது. எந்தப்பெண் தகப்பன் கோத்திர சம்பந்தமும் தாயின் ஸபிண்ட சம்பந்தமும் இல்லாதவளோ அவளே விவாக யோக்கியதையுள்ளவள் என்பது அனேக ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டது. அங்ஙனமே மனு—

अससपिण्डा च या मातुरसगोत्रा च या पितुः। सा प्रशस्ता द्विजातीनां दारकर्मणि मैथुने ॥

தாயின் ஸபிண்டசம்பந்தமில்லாதவளும்தகப்பனுக்குஸகோத்திரத்திற்பிறக்காதவளுமே துவிஜர்களுக்கு தாரகன்மத்திலும் மிதுன சம்பந்தத்திலும் சிரேஷ்டை என்றார். இதன்பொருள்—தாயின் ஸாபிண்ட்ய சம்பந்தமும் தகப்பன் ஸகோத்திரஸாபிண்ட சம்பந்தமும் பெறாதபெண்ணே இல்லறத்தை நிறைவேற்றுதற்கு ஏற்ற பத்தினியாவாள்" என்பது. இங்ஙனம் கோத்திரம் முதலிய ஏற்பாட்டைக் கவனிக்காது இஷ்டப்படி விவாஹம்செய்தால் நமக்கும் பசுபக்ஷிகளுக்கும் வேற்றுமையாதும் ஏற்படாது. அவைகளுக்கும் விவாஹவிஷயத்தில் யாதும் பார்க்கவேண்டியதில்லை. நமக்கும்வேண்டியதில்லை என்றல்லவா ஆய்விடும். இங்ஙனமிருக்க கலியின் கொடுமையைப்பற்றி அதிகமாய் அனேகர் வீண்வாதம் செய்து பெண்களிடம் மணப்பதே முக்கியம் என்று அதற்கு

வேண்டியவரை பார்க்கவேண்டியதே அவசியமின்றி மற்றது அநாவசியமென்று நினைத்துவிடுகிறார்கள். மேலும் ஸகோத்திரத்திலும் விவாகம் செய்கிறார்கள். ஓ கலீ! உன் ஆக்ஷியில் இதைக்காட்டிலும் இன்னும் யாது நடக்குமோ அறியோம்! சகோதரியையும் விவாஹம்செய்துகொள்ள விடம்கொடுப்பாயோ யாதோ அறியோம். வயதில் அதிகமான பெண்ணையும் விவாகம்செய்யப்புகுந்தார்கள் அனேகர். அதுவும் அனேக ஜனசாதாரணமாமோ தெரியவில்லை. தற்காலத்திய நமது புரோகிதர்களோ அறிவீனர்களாயும் தரித்திரராயும் இருக்கிறார்கள். அவர் யாதும் ஸ்மிருதி ரஹஸியம் அறிந்தாரில்லை. வீட்டில் உள்ள கிரகஸ்தன் எதைக்கேட்பானே. அது சத்தாயினும் அசத்தாயினும் அது உசிதமே என்று சொல்லிமுடித்துவிடுவார்கள். அவரவர் வயிற்றுப்பிழைப்புக்குத் தக்கபடி அவரவர்செய்யவேண்டி நேரிடுகின்றது. இக்குற்றங்கள் என்று தொலையுமோ? இனி எந்த ஸமயம் முன்னோரைப்போல் நாம் ஸன்மத ஸதாசார பரிபூரணர்களாவோமோ தெரியவில்லை. இவ்விடத்தில் தென்னாட்டார் அம்மான் மகளை விவாகம்செய்கிறார்கள். அது விஷயத்தில் ஒரு வேதவாக்யம் பிரமாணமாம் என்கிறார்கள். அதாவது—

"ஓ இந்திர! நல்வழிகொண்டு நீ இந்த எமது யக்ஞத்துக்கு வா? வந்து யாம்கொடுக்கும் யக்ஞபாகத்தைப்பெற்றிடு. இங்கு உன்னை உத்தேசித்து வபை முதலிய அவிஸுகள் கொடுக்கப்பட்டன. இவைகளை "அம்மான் மகளை, மருமகன் பெறுவான் போலும் அத்தைமகளை அந்த ஸ்திரீயின் மருமான் பெருவான் போலும் இது உனது யாகம்" என்ற பொருளை விளக்கும் சுருதி வாக்கியமாகும். இதனால் இந்திராதிகளுக்கு வேள்விகளில் பாகம் பெறும் சுதந்திரம்போலவே அம்மான்மகளும் அத்தைமகளும் மருமகனுக்கு மணக்கச்சுதந்திரம் என்றாயிற்று. மேலும் வாஜஸனேயம் என்கிற சுக்லயஜுர் வேதத்தில் "ஒரே புருடனிடம் போக்தாவும் புஜிக்கப்படும்பொருளும் உண்டாகின்றது. ஆனாலும் மூன்றாந்தலைமுறையிலாவது நான்காந்தலைமுறையிலாவது சேருவோம்" என்றது. இதனாலும் முன்னர் கூறப்பட்டதே ஒப்பப்பட்டது. இதுவரைக்காட்டின வேதவாக்கியங்கள் அர்த்தவாதங்களேயாயினும் வேறு பிரமாணங்களுடன் விரோதமின்மையால் இங்கு குறித்த அர்த்தம் குற்றமுற்றதாகாது. 'மூன்றாந்

தலையில் சேருவோம்' என்றதனால் 'அம்மான்மகளை மணக்க வேண்டும்' என்ற ஓர் விதியும் கற்பிக்கவேண்டும். ஆகையால் அம்மான்மகளை விவாஹம்செய்வது வேதத்தில்கண்ட விஷயமே. ஸ்மிருதிகளோ அம்மான்மகள் விவாஹத்தைப் பலவழியில் நிந்திக்கின்றன.

मातुलस्य सुतामूढ्वा मातृगोत्रां तथैव च ।
समानप्रवरांचैव द्विजश्चान्द्रायणं चरेत् ॥

அம்மான் பெண்ணையும் தாயின் கோத்திரத் துதித்தவளையும் ஸமான பிரவரமுள்ளவளையும்ஒரு துவிஜன்விவாகம்செய்வானாயின் அவன் சாந்திராயணப் பிராயச்சித்தம்செய்துக்கொள்ளவேண்டும் என்றனர் சாதாதபர். பைடீநஸி என்பவர் "தாயுடன் பிறந்தவளுடைய மகளும் தாய்மாமன்மகளும் முறைக்குச் சகோதரிகள் அவர்களை விவாஹம் செய்யலாகாது என்றது வேதவாக்யம்" என்றனர். ஸுமந்து "தகப்பனுக்கு வாழ்க்கைப்பட்டவள் எவளும் தாயே யாவாள் அவளுடன் பிறந்தவர்களெல்லாம் அம்மான்களே. அவர்புதல்விகள் எல்லாம் தர்மசகோதரிகளே அவர்கள் மக்களும் மருமக்களே. இவ்வியவஸ்தை மீறினால் ஸங்கரம்செய்தவராவர்" என்றார். வியாஸர்:— துவிஜர்களுக்கு விவாஹத்தில் அவசியம் தாயின்சபிண்டர்கள் கூடாதாகையால் அவர்களைக் கட்டாயம் விலக்கவேண்டும்" என்றார். இது நிற்க இவ்வசனங்களெல்லாம் சாமான்யமாய் தாய்முறை தங்கை முறைகளை நிஷேதிக்கின்றனவாகவே, இவைகள் அம்மான்மகளை மணக்கக்கூடாது என்பதைப் பொருளாகக்கொண்டு முடியும் வழி எப்படி எனில், கூறுதும்:— "மனுஸ்மிருதியில்" அத்தையின் மகளையும் தங்கையையும் தாயார்சகோதரிகள் பெண்களையும் தாயம்மான் பெண்ணையும் மணந்தவன் மகாசாந்திராயண பிராயச்சித்தம் செய்துக்கொள்ளவேண்டும்" என்று விசேட நிஷேதம் காணப்படுதலால் இவைகளெல்லாம் அதேவிஷயத்தில் சேர்க்கவேண்டியவையே என்க. நிற்க. இவைகளெல்லாம் காந்தர்வாதி விவாகங்களைப்பற்றிய நிஷேதமேயன்றி வேறு பிராம்மம் முதலியவற்றிற்கல்ல. அவ்வகை விவாகங்களிற்றான் "பெண்களுக்குப் பிதிரு கோத்திர சம்பந்தம் விடுவதில்லை. பிதிரு கோத்திர சம்பந்தம் பிராம்மாதி விவாகங்களிலேதான் தொலையும்"

அவ்விவாகம் செய்யப்பெற்ற பெண், பிண்டகோத்திர சூதகங் களில் பர்த்தாவுடன் கலந்தாள் தன் பிதுருகோத்திர சம்பந் தத்தை விவாகத்தால் ஏழாவதடியில் விட்டுவிடுவாள்'' என்பதாதி வசனங்களாலும் ஸப்தபதி முதலிய கிரியைகளாலும், பிதுரு கோத்திர நிவர்த்தி பதிகோத்திர ப்ராப்தி இரண்டும் கைகூடும். காந்தர்வம் முதலிய விவாகங்களில் சப்தபதிக்கிரியை இன்மை யால் விவாகபூர்த்தியில்லை யாகவே, பிதுருகோத்திர சம்பந்த நிவிர்த்தியில்லை. ஆகையாற்றான், மார்க்கண்டேய புராணத்தில் "பிராமம் முமலிய விவாகங்களில் எக்கன்னிகைவிவாகம் செய்யப் பட்டாளோ அவளுக்குப் பிண்டோதகங்களைப் பதிகோத்திரத்தில் செய்யவேண்டும். காந்தர்வம் முதலிய விவாகங்களில் எவள் விவாகம் செய்யப்பட்டாளோ அவளுக்குப் பிதுருகோத்திரத் திலேயே பிண்டோதகங்கள் செய்யவேண்டும்'' என்றுள்ளது. இதனால் அம்மான் பெண்ணை மணக்கக்கூடாதென்ற வாதம் அவலமாயிற்றென்க. மேற்கண்டவிஷயம் ஒரு சார்பினர்கருத்து மற்றவர் இவ்விவாகம் வடநாட்டகத்துச்சிட்டர் வெறுத்தது ஆயினும் தென்னாட்டவர் அதை யனுஷ்டிக்கின்றார். வடநாட்டுச் சிட்டர்களுக்கும் தென்னாட்டுச் சிட்டர்களுக்கும் எவ்விஷயத் திலும் வித்தியாசம் இல்லை, ஆனாலும் வடநாட்டவர்களுக்கும் தென்னாட்டவர்களுக்கும் அனேகபேதம் ஆசாரங்களில் உண்டு போதாயனர்.— "ஐவகை விபரீதம் உண்டு தென்னாடுகளில் உள்ளவைகளை எடுப்பாம்:—உபநயனமாகாத குழந்தைகளுடன் புசித்தல், பத்னியுடன் புசித்தல், பழயசோற்றையுண்ணல், அம்மான் பெண்ணையும் அத்தை பெண்ணையும் மணத்தல், முதலி யன. வடநாட்டிலோ கம்பளிவிற்றல், குடித்தல், கடற்கடத்தல் முதலியன. இவற்றுள் ஒன்றைமற்ற விடம்செய்த மற்றவன் பாபியாவான்'' என்றனர். இங்குகண்டபடி வடநாட்டவர் துரா சாரத்தை இந்நாட்டில் செய்பவனும் வீணில் குற்றமுள்ளவனு வான் என்பது இதற்குப் பிரமாணம் தேசமேயன்றி வேறில்லை, மேல் சிஷ்டாசாரமே பிரமாணமென்றால், அந்தோ! பெண்ணை மணத்தலும்கூடப் பிரமாணமாகலாம். பிரம்மதேவர் அங்ஙன மனுட்டித்தார் எனக்கேட்கப்பட்டதில்லையா? எனில், அது கூடாது. "தேவர் இருஷிகள் இவர் செய்ததை செய்யற்க'' என்றதனாலும், "தேஜோவான்களுக்குக் குற்றமில்லை''யென்ற

நியாயத்தாலுமென்க. அதுகொண்டே போதாயனரும் எதைத் தேவர் அனுஷ்டித்தாரோ. எதைரிஷிகளனுஷ்டித்தார்களோ. அதை மனிதர் அனுஷ்டிக்கக்கூடாது எது விதிக்கப்பட்டதோ அதையே அனுஷ்டிக்கவேண்டியது. இதனால் வஸிஷ்டர் பாராசராதிரிஷிகள் செய்தவனுஷ்டானம் நமக்குப் பிரமாணமாகாதெனத்துணிக. ஆகவே இக்கலிகாலத்துகூத்தர் சங்கை ஒழிந்ததென்றறிக.

ஆதலாற்றான் முகூர்த்ததீபிகை முதலிய சோதிட கிரந்தங்களில் இவ்விவாகம் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதிகம் எழுதுவதில் பயன்யாது, எதுசெய்யப்படின் நல்லொழுக்கமுள்ள பெரியோர் மனங்கோணுதோ அதுசெய்வது குற்றமல்லவென்றே சொல்லவேண்டியது. "சிறியபெண்ணேயே விவாகம் செய்ய வேண்டும்" என்றதுவிதி. இங்குசிறியபெண் என்றது வயதாலும் சரீரத்தாலும் எனவிருவகை. பெண்களுக்கு வயது குறைவாக இல்லாவிடில் அதிகவயதுடைய பெண்களுடன் கூடியபுருஷற்குண்டாகும் குற்றங்கள் அனேகம். முற்கூறியவாறு ஸ்திரீசரீரத்திற்குச் சோணிதமும் புருடசரீரத்துக்குச் சுக்லமும் பிரதானமாகவே, பரிபாகம் அதிகப்பட்டஸ்திரீ சோணிதத்தில் பரிபாகம் குறைந்த சுக்லம் சேர்ந்தால் அதை இது உருக்காதுபற்றி அங்குசந்தானவிருத்தியும் சுகமும் குறையும். கபமுதலிய துற்குணங்களும் உண்டாகும். இவ்விஷயம் "பதார்த்தகுணசிந்தாமணியில் மச்சமுனிவரால் நன்குணர்த்தப்பட்டது. இதையே முன்னொரு பத்திரிகையில் வெளியிட்டோம் ஆதலால் கன்மவிபாக சாஸ்திரத்தில் அதிகவயதுள்ள ஸ்திரீகளின் சம்பந்தத்தால் குன்மம் குஷ்டமாதிரோகங்கள் உண்டாம் என குறித்திருக்கின்றூர்கள். தன்வந்தரிபகவானும் வயதில் முதிர்ந்தவளை யடைந்தவன் வாதரோகத்தால் பீடிக்கப்படுவான் என்றூர் இங்ஙனமே அநேகமுனிவர்கள் உலகஉண்மை தெரிந்து அதிக வயதுள்ள ஸ்திரீகளின் சம்பந்தம் பலரோகங்களை உண்டாக்கும் என்று தீர்மானித்தார்கள். ஆதலால் இந்த ஏற்பாட்டை எங்கும் சிறிதும் எவரும் எக்காரணத்தாலும் எவ்வகையிலும் தள்ளக் கூடாது. ஏதேனும்மதியீனத்தால்அவ்விதம் சம்பவித்தால் அதற்கு அனேக பிராயச்சித்தங்கள் பெரியோர்களால் விதிக்கப்பட்டன.

(தொடரும்) சுப்ரமண்யம்.

# சாரதா மசோதா கண்டனம்.

794-வது பக்கத்தொடர்ச்சி.

எல்லோரும் ஒற்றுமையாயும் சிநேகமாயுமிருக்கவேண்டியது அவசியம். ஆனாலும் பகவானுடைய ஆக்ஞாரூபங்களான சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமில்லாமலிருக்கவேண்டும். இதையே श्रुतिस्मृती ममैवाज्ञा சுருதிஸ்மிருதிகள் எனது உத்திரவுகள். அதை மீறுகிறவன் என் சத்துரு என்று பகவான் சொல்லுகிறார். ஆகையினால் சுருதிஸ்மிருதிகளில் கூறியிருக்கிறபடி அனுஷ்டிக்கிறதால் பஞ்சமர்களுடன் நமக்கு ஒற்றுமையில்லை என்றும் சினேகம் இல்லையென்றுகூறுவது முற்றிலும் பிசகு. நம் தாயாயிருந்தாலும் வீட்டுக்காகாத காலங்களில் அவர்களை வீட்டைவிட்டு விலகச்செய்வதும் அவர்களோடு சம்பாஷிக்காமலிருப்பதும் ஸ்மிருதியின் வசனத்திற்கிணங்கியே. அப்படிச்செய்வதிலிருந்து தாயாரிடம் நமக்கு பிரீதி சினேகம் இவைகள் இல்லை என்று ஏற்படுமா.

இங்ஙனமிருக்க சில கலகக்காரர்கள் சுயாலங்கருதி நமக்குள் கலகங்களை விளைவிப்பதற்காக ஜாதியென்பதே கிடையாதென்றும் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டவர்களுக்குள் பேதம் கிடையாது என்றும் கண்டவாறு பிதற்றுகின்றார்கள். ஒன்றுமறியாத ஆதித்திராவிடர்களை முன்னுக்குக் கொண்டுவருவதாகவே வேடம் பூண்டு நமக்குள் கலகத்தை உண்டுபண்ணி தங்கள்வயிற்றை நிரப்பப்பார்க்கும் வழியேயன்றி உண்மையாக நமக்கு பஞ்சமர்களிடம் விரோதமில்லை. பஞ்சமர்களுக்கு ஷேக்ஹேண்டகொடுத்து திண்ணையில் உட்காரவைத்து அவர்களோடு புசித்தால் ஒற்றுமை என்பதில்லை. ஆகையினால்.

श्रेयान् स्वधर्मोविगुणः परधर्मोभयात्रहः ।
सहजं कर्मकौन्तेय सदोषमपि न त्यजेत् ॥
स्वेस्वे कर्मण्यभिरतः संसिद्धिंलभते नरः ।

ஒவ்வொருவரும் தங்களுக்குற்ற தர்மத்தை எந்த தோஷத்துடன் இருப்பினும் நன்றாயனுஷ்டிக்க முடியாவிடினும் நமது சக்திக்கு

இயன்றவாறு அனுஷ்டித்தாலும் அது நன்மையே பயக்கும். வேறுவர்ணங்களுக்கோ, வேறு ஆசிரமங்களுக்கோ விதிக்கப்பட்ட தர்மத்தை நாம் விதிவழுவாமல் அனுஷ்டித்தாலும், அதனால் நமக்கு பயமும் கஷ்டமுமே ஏற்படுகின்றதென்று கீதாசார்யர் கூறியிருக்கிறபடி (அந்தந்தஜாதியார் அவரவர்களுக்கு விதித்த தர்மத்தை சரிவர அனுஷ்டித்துவந்தால் உலகத்தில் க்ஷேமமேற்படும், ஸ்வராஜ்யமும் சித்தியாகும். ஆகையால் தீண்டாமையை விலக்கவேண்டுமென்று பாடுபடும்கனவான்களே; தீண்டாதவர்களுக்குத் தனியாக கோவில்களை கட்டிக்கொடுத்தும் கிணறு குளங்களை வெட்டிக்கொடுத்தும் உபகாரம் செய்வதைவிட்டு அவர்களை ஆலயப்பிரவேசம் முதலிய அதர்ம மார்க்கங்களில் பிரவிர்த்திக்கும்படி செய்யவேண்டி மசோதா கொண்டுவருவது மிகவும் தவறானகாரியம்.) அவ்விதம் கொண்டுவந்து அது பாஸானாலும் அதினால் அவர்களுக்குத் தாங்கள் கெடுதல்களை செய்வதாகுமேயொழிய உபகாரம் செய்ததாக ஆகாது. ஆகையால் நம் அரசாங்கத்தாரையும் இவ்வித மசோதாவை அங்கீகரிக்கக் கூடாதென்று கேட்டுக்கொள்வதுடன் நீங்களும் அம்முயற்சியைவிட்டு நமது பெரியோர்களான மநு, பராசரர், முதலியவர்கள் உபதேசித்த மார்க்கத்தைவிடாது தர்ம மார்க்கங்களில் முயற்சி எடுத்துக்கொள்வீர்களாக.

R. சுப்பிரமணிய சிரௌதிகள்.

---

இந்தஸமயத்தில் ஸபையிலிருந்த ஒருவர் இதுவிஷயமாகச் செய்த சில ஆக்ஷேபங்களுக்கு ஸ்ரீ ராமசாஸ்திரியாரும் ஆக்கிராஸனரும் தகுந்த சமாதானங்களைக் கூறி திருப்திசெய்தார்கள்.

---

# வர்ணாச்ரம தர்மம்.

தற்காலம் வர்ணாச்ரம தர்மானுஷ்டானங்கள் நாளுக்குநாள் குறைவடைந்து வருகின்றன. அவரவர்களுக்கு தம்மனதில்தோன்றியதையெல்லாம் தர்மமாக நினைக்கும்படி வந்துவிட்டது. தர்மமென்பது சுலபமாயறியக்கூடியதல்ல. மிகவும் ஸூக்ஷ்மமானது. சாஸ்திரங்களிலும் धर्मस्यतत्वं निहितं गुहायां என்று இவ்விதமே

கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் தர்மவிஷயத்தில் சாஸ்திரங்களைப் பிரமாணமாகக்கொள்ளவேண்டுமேயல்லாமல் நம் ஸம்ப்ரதாயத்தைக் கலக்கக்கூடாது. கீதையிலும் தர்மம் அதர்மம் என்று பகுத்தறியும் விஷயத்தில் சாஸ்திரம்தான் உனக்குப் பிரமாணமென்று பகவான் கூறியிருக்கிறார். அதிலும் அவரவர்களுக்கேற்பட்ட தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டுமேயன்றி பிறர் தர்மத்தை அனுஷ்டிப்பதில்பயனில்லை. துக்கத்திற்கும் காரணமாகும். இதுவும் கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதர்மத்தைத் தர்மமென்று கூறுகிறவர்களுடையவார்த்தையைநம்பி நாம் அனுஷ்டித்தால் அதினாலேற்படும் பாபப்லன்களை நாம்தான் அனுபவிக்கவேண்டுமேயன்றி, தற்காலத்தில் விதவா விவாகத்தையும் ருதுமதீ விவாகம் முதலான கெட்டகாரியங்களையும் செய்யும்படி உபதேசிக்கும் பெரியார்கள் வரமாட்டார்கள். சாஸ்திரம் பகவானுடைய ஆக்ஞையென்று கீதையிலும் கூறப்பட்டிருப்பதால் அதில் சொல்லியபடி நடத்தினால் அதற்குற்ற பலனை அவர் கட்டாயம் அளிப்பர். எந்தப்பலன்களையும் கொடுக்கக்கூடிய சக்தியுமவருக்குண்டு. ஆகையால் சாஸ்திரங்களின் விதிப்படி அவரவர்களும் தங்கள் தர்மங்களை அனுஷ்டித்து சிரேயஸ்ஸைப் பெறவேண்டும். சாரதாசட்டம் முதலான அதர்மானுஷ்டானத்தால் இவ்வுலகில் கஷ்டமும் பரலோகத்தில் நரகத்திற்கும் நாம் ஆளாகவேண்டியிருப்பதால் அவைகளை அடியோடுகண்டித்து விலக்கவேண்டியது. ஆவச்யகம்

பி. அருணாசல சாஸ்திரி.

---

# அக்ராசனர் முடிவுரை.

ஒருதினம் நடத்துகிறதென்று ஸங்கற்பித்துத் துவக்கப்பட்ட இச்சபை ஸ்ரீஅகிலாண்டேச்வரியின் அனுக்கிரஹத்தால் மறுதினமும் விஸ்தாரமாய் நடைபெற்றதானது பாராட்டத்தக்கது. இச்சபையில் ஒவ்வொரு தினமும் கொடுக்கப்பட்ட விஷயங்களை மிகுந்த சிரத்தையுடனும் பக்தியுடனும் சாஸ்திராசாரங்களுக்குமுரண்படாமல் நன்கு உபன்யஸித்துஸகல ஜனங்களுக்கும்

விசேஷ ஸந்தோஷத்தையுண்டுபண்ணி ஸபையையும் கௌரவப் படுத்திய பண்டிதரத்னங்களுக்கு நான் வந்தனமளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒவ்வொரு தினமும் ஸபை துடங்குவதற்கு 10-நிமிஷம் முந்தியே சிரத்தையாய் வந்திருந்து நடந்த விஷயங் களை ஆவலுடன் செவியுற்று முடிவில் ஏகாபிப்பிராயமாய் சாரதா சட்டத்தையும் இதுபோன்ற மதஸம்பந்தமான மற்றுமுள்ள மசோதாக்களையும் அடியோடு ரத்துசெய்து சட்டஸபைகளில் இனி மதஸம்பந்தமான யாதொரு மசோதாவும் கொண்டுவரக் கூடாதென்றும் தடுக்கவேண்டுமென்றும் இந்த ஸபையில் ஆன தீர்மானங்களை நம் அரசாங்கத்துக்கு வணக்கமாய் விக்ஞாபனம் செய்துகொள்ளும்படி இந்தசபா ஸிகிரிட்டெரி அவர்களுக்கும் அனுமதிகொடுத்து ஸபையையும் நன்றாய்நடத்திவந்தஸபையோர் களுக்கு என்னுடையஸந்தோஷத்தை அறிவிக்காமலிருக்க முடிய வில்லை. இவ்விதம் அடிக்கடி ஆங்காங்கு வர்ணாச்ரம ஸபைகள் நடந்து அவ்வக்காலங்களில் நம்தர்மத்திற்கேற்படும் இடையூறு களைக் கண்டித்துவந்தால் தற்காலம் பாக்கியாய்நிற்கும் ஸநாதன தர்மத்திற்காவது குறைவுநேராமல் பிரகாசித்துக்கொண்டிருக்கும். ஜனங்களும் அதையனுஷ்டித்து சிரேயஸ்ஸை அடைவார்கள். ஆகையால் இவ்விதமே ஸ்ரீ ஜம்புநாதரும் ஸ்ரீ லோகமாதாவான அகிலாண்டேசுவரியும் அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று அவர்களுடைய திருவடிகளில் பன்முறைபணிந்து பிரார்த்தித்து ஸபையையும் பூர்த்தி செய்துகொள்ளுகிறேமென்று அக்கிரா ஸனாரவர்கள் முடித்தார்கள். உடனே அவர்களுக்கு வந்தனோப சாரங்கூறி ஸகலஜனங்களுக்கும் ஸ்ரீ அகிலாண்டேசுவரி பிரஸாதம் சந்தனம், தாம்பூலம், பழங்கள்கொடுத்து ஸபை சிறப்பாய் முடிவுபெற்றது. சுபம்.

டி.ஸதாசிவ அய்யர் ஸிகிரிட்டேரி

திருவானைக்காவல்

# நடேசஸ்துதி.

गीर्वाणाः कति वा न सन्ति भुवने भक्तेष्टसन्दायकाः
नाहं तत्पदसेवनं नच फलं तस्येश मन्ये विभो ।
यस्मात्तेपि तवांघ्रिमेव विबुधाः कैवल्यसौख्यप्रदं
बुध्वा भक्तिसमन्विताः प्रतिदिनं पश्यन्ति पादांबुजम् ॥८१॥

ஓ நடேசப்ரபோ! உம்முடைய சரணமே மோக்ஷசுகமளிப்பதென்றறிந்து ஸ்ரீமந்நாராயணன் முதலான தேவர்களும் தினந்தோறும் உம்முடைய திவ்யகுஞ்சித சரணத்தையே தர்சிக்கின்றார்கள். ஆதலால் பக்தஜனங்களுக்கு ஸ்வர்காதி விஷய சுகங்களையளிக்கும் தேவர்கள் உலகில் பலர்களிருந்தும் அவர்களைநான் பஜிக்கவில்லை. அவர்களளிக்கும் பலத்தையும் விரும்பேன்.

“ अविद्यास्तमयो मोक्षः सा च बंध उदाहृतः ”

புத்ரமித்ராதி ஸம்சாரபந்தரூபமான அஜ்ஞான நாசமே மோக்ஷரூபமாகையால் ज्ञानादेवतु कैवल्यं ஞானத்தினால்தான் மோக்ஷமேற்படுமாகையால் ईश्वरात्ज्ञानमन्विच्छत् அந்தஞானத்தையும் ஈசுவரரிடமிருந்தே விரும்பவேண்டுமாகையால் திவ்யநடேச குஞ்சித சரணத்தையே முமுக்ஷுக்கள் பஜிக்கின்றார்கள். இவ்வாறேசிதம்பர மாகாத்மியமும் போதிக்கின்றது.

देवाच्छ्रेष्ठतमस्तस्य श्रीमान् ताण्डवभूषितः
भवांभोधिमहापोतः पादः पद्मारुणच्छविः ।
तस्य दर्शनमात्रेण सकृत्पापी च मुच्यते
किंपुन स्सुकृती क्षेत्रवासी नित्यनिरीक्षकः ॥अध्याय॥२४॥

சம்சார சமுத்திரத்திற்கு தோணிபோலிருக்கின்றதும், செந்தாமரைபோல் சிவந்த காந்திபொருந்தியதும், தாண்டவத்தால் அலங்கரிக்கப்பட்டதும், சமஸ்த மங்களங்களோடுகூடியதுமான ஸ்ரீநடேசருடைய குஞ்சித சரணமானது ஸ்ரீ நடேசமூர்த்தியைக் காட்டிலும் ச்ரேஷ்டமானது. அதனுடைய ஒருதடவை தரிசன மாத்திரத்தால்மஹாபாபியும் மோக்ஷமடைகிறான். நித்யந்தர்சிக்கிற சிதம்பரக்ஷேத்ரவாசியான புண்யபுருஷன் முக்தனென்பது கைமு

திகசியாயசித்தம். இவ்வாறே ஸ்ரீமதப்பைய தீக்ஷிதசரணரும் நிர்யாணசமயத்தில் சிதம்பர க்ஷேத்ரத்தில் கூறுகின்றார்கள்.

चिदंबरमिदं पुरं प्रथितमेव पुण्यस्थलं
सुताश्चविनयोज्वला: सुकृतयश्च काश्चित्कृता: ।
वयांसि मम सप्तते रुपरि नैव भोगे स्पृहा
न किञ्चिदहमर्थये शिवपदंदिदृक्षेपरम् ॥

आभाति हाटकसभानटपादपद्मज्योतिर्मयो मनसिमे तरुणारुणोयम् ।

இந்த சிதம்பர க்ஷேத்ரமானது சுருதிஸ்மிருதிபுராண இதிஹாஸங்களினால் மிகப் பிரசித்திபெற்றது. விநயசம்பந்நர்களான புத்ரகளுமிருக்கின்றார்கள். அவசியம் அனுஷ்டிக்கவேண்டிய அக்நிஹோத்ராதி கர்மாக்களும் அனுஷ்டிக்கப்பட்டன, வயதும் 70.க்குமேல் ஆயின. ஆதலால் வேறுயாதொரு போகத்தையும்விரும்பவில்லை, சிவ குஞ்சிதசரணத்தையே தர்சிக்க விரும்புகிறேன்!! கனக சபையில் பிரகாசிக்கின்ற நடராஜனுடைய குஞ்சிதசரணகமல ஜ்யோதிர்மயமானசூர்யன் என்னுடைய மனதில்பிரகாசிக்கின்றது என்றுகூறி குஞ்சிதசரணத்தில் ஐக்யமானார்கள்.

नूनं जरामरणघोरपिशाचकीर्णा संसारमोहरजनीविरतिंप्रयाता ॥

ஜராமரணரூபமான பயங்கர பிசாசங்களால் வியாபிக்கப்பட்ட சம்சாரரூப அஞ்ஞானமாகிற இரவுமுடிந்தது, நிச்சயம் என்று தீக்ஷிதபுத்ரர்கள் ச்லோகபூர்த்தி செய்தார்கள், ஆதலினால் சிவ குஞ்சிதசரண தர்சனம் முக்தியளிக்குமென்பது சித்தம் இவ்வாறே நீலகண்ட தீக்ஷிதர்களும் ஸ்துதிக்கின்றார்கள்.

दृष्ट्वा कौस्तुभमप्सरोगणमपि प्रक्रान्तवादा मिथो
गीर्वाणा: कति वा न सन्ति भुवने भारादिव: केवलम् ।
निष्क्रान्ते गरले द्रुते सुरगणे निश्चोष्टिते विष्टपे
माभैष्टेति गिराऽऽविरास धुरि यो देवस्तमेव स्तुम: ॥

அமிர்தமதன சமயத்தில் பாற்கடலிலிருந்து உண்டான கௌஸ்துபமணியையும் அப்சரஸ்திரீகூட்டத்தையும்பார்த்து ஆசைகொண்டு எனக்கு எனக்கு என்று கலஹஞ்செய்கின்ற ஸ்வர்க்கலோகத்துக்கு பாரபூதர்களான விஷ்ணுமுதலான பல தேவர்களிருந்

தும் அச்சமயமே காளகூட விஷமுண்டானபொழுது சகல தேவர்களும் பயந்து ஓட ஸகல ஜகத்துக்களும் பயத்தினால் வியாபாரமுமில்லாமலிருக்க பயப்படாதீர்களென்று திவ்ய வசனாமிர்தத்தால் காப்பாற்றியருள்செய்த பரமேச்வரனையே ஸ்துதி செய்கிறோம். पश्वादिभिश्चाविशेषात् பிரியமான புற்களைக் கண்டு விரும்பி ஓடிவருகிறதுகளும் பயங்கரமான தண்டத்தைக்கண்டு பயந்து ஓடிப்போகிறதுகளுமான பசுக்களுக்கு ஒப்பானவர்களே தத்வஜ்ஞானமில்லாத சகலபண்டிதர்களும் என்று ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள் அத்யாஸபாஷ்யத்தில் கூறியபடி தேவர்களெல்லாம் பசுதுல்யர்களென்றும் ஆகையினாலே ஈசுவரனுக்கு பசுபதி என்னும் நாமமமைந்திருக்கிறதென்றும் ஆதலினால் உமாபதியான நீலகண்டனான நடனபதியான பரமேச்வரந்தான் ஸ்துத்யர்ஹர் என்று ஸ்துதிகர்த்தா நிரூபிக்கின்றார். இவ்வாறே ஸ்ரீமத்சங்கர பகவத் பாதாளும் சிவாநந்தலஹரியால் ஸ்துதிக்கின்றார்கள்.

सहस्रं वर्तन्ते जगति विबुधाः क्षुद्रफलदाः
नमन्ये स्वप्ने वा तदनुसरणं तत्कृतफलम् ।
हरिब्रह्मादीनामपि निकटभाजामसुलभं
चिरं याचे शंभो शिवतव पदांभोजभजनम् ॥

ஓ! மங்களத்தைத்தருகின்றபரமசிவனே! உலகில் அல்ப்பபலனைத்தருகின்ற தேவர்கள் அனேகர்களிருந்தும் அவர்களை சேவிப்பதையும் அவர்களால் கொடுத்திருந்த பலத்தையும் ஸ்வப்பனத்திலும் நினைக்கவில்லை. சமீபத்தில் வசிக்கின்ற பிர்ம விஷ்ணுமுதலானவர்களுக்கும் கிடைக்கத்தகாத உம்முடைய திவ்ய பஜநத்தை யாசிக்கின்றேன்!! இதுமுதலான பல மஹான்களுடைய ஸ்துதிகளாலும், புராணஇதிஹாஸ சாஸ்திர பர்யாலோசனையாலும், ஸ்ரீமந் நடராஜதிவ்யசரண பஜநமே முக்திப்ரதமென்று இந்த நடேசஸ்துதிகர்த்தான ஸ்ரீ ராமலிங்கயஜ்வாவும் நிரூபிக்கின்றார். (21)

नाहं पूजयितुं त्वदीयचरणांभोजं च संवीक्षितुं
ध्यातुं वा विधिवन्न वेद्मि न दृढा भक्तिश्च मे विद्यते ।
किं कुर्यां करुणानिधे मम मनस्तारल्ययुक्तं विभो
दीनोऽहं भवरोगदूनहृदयः त्वत्पादपद्मं भजे ॥२२॥

வியாக்ரபாதர் முதலான மஹர்ஷிகளைப்போல், சாஸ்திர விதிப்படி உம்மைப்பூஜிப்பதற்கும் தர்சிப்பதற்கும் தியானஞ்செய்வதற்கும் அறிவில்லாதவன், கண்ணப்பன் முதலான பக்தமணிகளைப்போல் த்ருடமான பக்தியுமில்லாதவன். ஓ கருணாநிதியே என்னுடைய மனம் மிகவும் சஞ்சலமாயிருக்கின்றது. என்னசெய்வேன். சம்சாரரோகத்தால் மிகக் கவலைப்படுகிற நான் உம்முடைய சரண கமலத்தையே பஜிக்கின்றேன். (22)

बालोऽहं भगवन् नमेऽस्ति भुवने त्राता भवन्तं विना
त्वं माता जनकस्त्वमेव करुणासिन्धोऽसि संशिक्षकः ।
भक्तोऽहं तव सन्निधावनुदिनं त्वत्कुञ्चिताङ्घ्रिं मुहुः
पश्यामीश सभापते सकरुणं मां पाहिसंसारतः ॥२३॥

ஓ நாதனே நான் சம்சார தாணஞ்செய்யும் சாமர்த்தியமில்லாதவன், எனக்கு உம்மைத்தவிர ரக்ஷிப்பவனில்லை. ஓ கருணைக்கடலே நீயே தாய். நீயே தந்தை. சிக்ஷிக்கிற குருவும் அரசனும் நீயே. உம்முடைய தாஸனான நான் தினந்தோறும் உம்முடைய குஞ்சித சரணகமலத்தைத் தர்சிக்கின்றேன். ஓ சபாநாதனே துக்கமயமான இச்சம்சாரத்திலிருந்து கருணையுடன் காத்தருள் செய். "நீ ஸ்திரீ, நீ புருஷன், நீ பிள்ளை நீ பெண், தண்டத்தோடு நடக்கிற கிழவனும் நீ, குழந்தையும் நீ, நீ சர்வாத்மகன் என்று ச்வேதாச் தேவரோநிடதம் கூறுகிறதன்றோ. (23)

संसाराख्यमहावनेऽतिविपुले संवर्धमानेऽन्वहं
भ्रान्तो मोहवशात् सभेश शरणं त्वामेव यामि प्रभो ।
यस्मात्फालविलोचनाग्निशिखया दग्धुं समर्थो भवान्
संसाराख्यमहाटवीं पुररिपो दीनावनाग्रेसर ॥२४॥

ஓ! சபா நாயக!! சம்சாரமாகிற மிகவிசாலமான ஓர் பெரிய ஆரண்யம் நாள்தோறும் மிகவிருத்தியடைகிறது. நெற்றிக்கண்ணால் திருபுரமகா ராக்ஷஸர்களை சம்ஹரித்த தீனரக்ஷக சிகாமணியே நீ நெற்றி நெருப்புக்கண் ஜ்வாலையால் சம்சாராரண்யத்தை பொசுக்குவதற்கு சமர்த்தனாகிறாய். ஆதலினால் சம்சார துக்கத்திலிருந்து நீயே ரக்ஷிக்கவேணும். (24)

दीननामभयप्रदोऽसि भगवान् दक्षोसि भक्तावने
संसारार्तिनिवारकोऽसि करुणारूपोसि यस्मात्प्रभो ।
तस्माद्दीनतमं भवाब्धिपतितं त्वद्भक्तिमन्तं जनं
श्रीमद्धेमसभापते सकरुणं संसारमुक्तं कुरु ॥२५॥

துக்கமடைந்த மார்க்கண்டன் முதலானவர்களுக்கு மிருத்யு பயத்தை நிவர்த்திசெய்து அபயமளித்தவர் நீரே. திருநீலகண்டர் முதலான பக்தர்களை ரக்ஷிப்பவர் நீரே. மணிவாசகர் நந்தன் முதலியவர்களுக்கு சம்சார நிவர்த்திசெய்து முக்தியளித்தவர் நீரே. ஆதலால் மிகக்கருணையுள்ளவர் நீரே. ஸ்ரீகநகசபாநாதனே துக்கிதனும் சம்சார சமுத்திரத்தில் முழுகினவனும் உம்முடைய பக்தி வந்தனுமான என்னை சம்சாரத்திலிருந்து விடுபட்டவனாக செய்தருள் புரியவேணும். (தொடரும்)

சிதம்பரம் ராஜா, சோமசேகர தீக்ஷிதர்

---

ஸ்ரீ சாரதா நவராத்திரி

# மஹோற்சவ பத்திரிகா.

कदंबवनचारिणीं मुनिकदंबकादंबिनीं
नितंबजितभूधरां सुरनितंबिनी सेविताम् ।
नवांबुरुह लोचना मभिनवांबु दश्यामळां
त्रिलोचनकुटुंबिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥

கும்பகோண நிவாஸிகளான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகள் அவர்கள் சிஷ்யகோடிகளின் அனுக்கிரஹார்த்தம் விஜய யாத்திரையாய் புறப்பட்டு அநேக திவ்ய க்ஷேத்ர தீர்த்தாடனங்களை செய்துகொண்டு இக் காஞ்சி மண்டலத்தைச்சார்ந்த க்ஷீரநதிப் பிராந்தியத்தில் ஸஞ்சரித்துவருங் கிரமத்தில் நாளது பிரஜோத்பத்தி ஹூ வியாஸபூஜா சாதுர்மாஸ்ய ஸங்கல்ப்ப மஹோற்சவத்தை பக்தகோடிகளின் பிரார்த்தனையின்பேரில் இச்சித்புரியில் நடத்தி இரவும் பகலும்

பக்திஞானவைராக்கிய ஸாதனங்களான திவ்யோபதேசங்களால் அனைவரையும் ஆனந்த பரவசர்களாகச்செய்தது யாவரும் அறிந்த விஷயமே.

ஸ்ரீ சாரதா நவராத்திரி மஹோற்சவத்தையும் ஈண்டே நடத்தி அனுக்கிரஹிக்க வேண்டுமென்ற பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ மகாஸ்வாமிகள் அவர்கள் ஷை மஹோற்சவத்தைஅவ்விதமே நடத்த உத்திரவுபிறப்பித்திருப்பது இத்தேச வாசிகளான மஹாஜனங்களின் புண்ணிய பரிபாகமேயாகும்.

ஆதலால் நாளது பிரஜோத்பத்தி ஞூ புரட்டாசி மீ 26வ ஆஜவீசு சுத்த பிரதமை சோமவாரம் (12—10—31) முதல் தொடங்கி சித்தூர் கோட்டா அவர்களின் சத்திரத்தில் நடத்தப்படும் ஸ்ரீ சாரதா நவராத்திரி மஹோற்சவத்திற்கு தாங்கள் ஸகுடும்பம் வந்திருந்து ஸ்ரீமஹா திரிபுர சுந்தரியின் பூஜா விசேஷவைபவம் முதலியவைகளைக்கண்குளிரக்கண்டு, ஆனந்தித்துஸாக்ஷாத்வித்யா ஸ்வரூபிணியான பராசக்தியின் பரிபூரண கடாக்ஷத்திற்கும் பரமாசாரியானுக்கிரஹத்திற்கும் பாத்திரர்களாகி ஸகல பாக்கியங்களையும் அடையப் பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு,
மஹோற்சவ கார்யநிர்வாக சபை பிரதிநிதிகளாகிய
சித்தூர் 2—10—31
அந்துகூர் சுப்ரமணியய்யா அக்ராசனாதிபதி.
சி. வெங்கடரமணய்யர், பி.எ., பி.எல்., கார்யதர்சி

---

# புத்தகவரவு, மதிப்புரை.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் திவ்யசரிதம் என்றபுத்தகம்எமது பார்வைக்கு வந்தது. பவப்பிணியைப் போக்கடிக்கக் கருதிய பிராணிகளுக்கு அல்லும் பகலுமாகப் பலநாட்களில் புத்தியானது பகவானிடத்தில் பதிந்து கிடக்கும்படி செய்வதே பெரியதோருபாயமாம். பெருங்காற்றுக்கெதிரே நிற்கும் பச்சிலைபோல் அசைந்துகொண்டிருக்கும் புத்தியை ஓரிடத்தில் ஒடுங்கச்செய்வதற்கும், விஷயங்களிலேயே பற்றுற்று வெளிநோக்கியே சென்றுகொண்டிருக்குமதை உள்நோக்கச்செய்வதற்கும் நாதானுஸந்தானம்

தவிர வேறு வழியில்லை. அந்நுண்மையைக்கண்டவர் நாதானு ஸந்தானத்திலீடுபட்ட யோகியேயாவாரெனினும் சிசுமுதல் கிழவன்வரையிலும், பாமரன்முதல் பண்டிதன்வரையிலும் பாம்பு பசு முதலிய திர்யக்ஜந்துவரையிலும் நாதப்பிரம்மத்திலீடுபட்டு கவலையுமசைவுமற்று நிற்பதுபிரத்தியக்ஷமன்றோ? இதன்பெருமை ஸாமவேதத்தின் உபவேதமாகிய காந்தர்வத்தில் விரிக்கப்பட்டது ஸங்கீத வித்வான்களுக்குத் தெரிந்ததே. அத்தகைய ஸங்கீதரஸம் பிழியப்பெற்றதும்தாரகப்பிரம்மத்தைப்ரத்யக்ஷமாகக்காட்டியதும் தியாகப்ரம்மம் திருவாய் மலர்ந்தருளிய கீர்த்தனங்களேயாகும். என்பதைத் தெரிந்துகொள்ளாதத் தென்னுட்டார் யாருமிலர் அந்த த்யாகப்ரம்மத்தின் கீர்த்தனைகளில் ஈடுபட்டவர்கள் அன்னாரின் திவ்ய சரித்திரத்தை எல்லோருமெளிதிலறியுமாறு அச்சியற்றிப் புத்தகமாக்கி பார்ப்போர் மகிழும்படி!மாந்தை ஸ்ரீமான் சா. கிருஷ்ணய்யரவர்கள் மைலாப்பூர் ஸ்ரீ கிருஷ்ணுபப்ளிஷிங் ஹவுஸ் மூலமாய் வெளியிட்டிருக்கிருர்கள். ஸ்ரீமானய்யரவர்களின் குணுதிசயங்களையும் கல்வியின் வன்மையையும் தெரியாத தமிழுலகமில்லையாதலின் அதிகமிங்கு விரிக்கவேண்டியதில்லை. தியாகப்ரம்மத்தின் சரித்திரமோ திவ்ய சரித்திரம் அதை எழுதியிருக்கும் தமிழ்நடையோ மிகச்சிறந்தது. என்பது ஷை புத்தகத்தைப் படிக்கத்தொடங்கியது முதலே வெளியாகும். ஷை புத்தகம் மைலாப்பூர் பி ஆர். சிவனது முன்னுரையுடனும், குகதாஸ் எஸ். வி. நடராஜனது சிறப்புரையுடனும், இதனை ஆக்கியோனுன ஆசிரியனது அறியதோர் சிறிய குறிப்புடனும், அழகிய அநேக படங்களுடனும் கூடியதாயும், எல்லோரும் எளிதில் வாங்குவதற்காகவென்றே குறைந்த விலையுள்ளதாயுமிருக்கிறது. இதன் விலை அணு எட்டே. ஸ்ரீ கிருஷ்ணு பப்ளிஷிங் ஹவுஸிலும், சுதேசமித்திரன் புத்தகசாலையிலும் கிடைக்கும். ஸங்கீதரஸிகர்கள் அதன்மூலமாய் தியாகப்ரம்மத்தின்திவ்ய சரித்திரத்தைத்தெரிந்து கொள்வார்களாக. சுபம்,

---

பத்திராதிபர்.

# ॥ माध्व "अथ" शब्दविचारः ॥

பிரஸங்கத்தினுல் நேர்ந்த மாத்வபாஷ்ய **अथ** சப்தார்த்த விசாரத்தில் என்னுல் எழுதப்பட்ட ,,நாகருஜசர்மோக்திகண்டன நக்ஷத்ரமாலா, விவ்ருதி'' இவைகளுக்கு உத்தரம்போல் ஒன்று ச்லோகரூபமாயும் வாக்யரூபமாயும் ஷை சர்மா அவர்கள் எழுதி யிருக்கிருர்கள். இப்போது அவர் எழுதியதையும் நான் எழுதி யதையும் மூன்று மதவித்வான்களும் பார்த்து பக்ஷபாதமில்லாமல் நான் எழுதியதற்கு ஸமாதானம் சர்மா அவர்கள் எழுதியதில் ஏற்படுகிறதாவென்பதை ஆர்யதர்மத்தில் வித்வான்கள் எழுதினுல் எனக்கு மிகவும் ஸந்தோஷமாக இருப்பதுடன் எழுதின வர்களுக்கு என் மனப்பூர்வகமான வந்தனத்தையுமளிக்கிறேன். ஆனுல் எழுதுவது சாஸ்திரவிசாரமாகவும் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**"अथ"** என்பதற்கு மாத்வபாஷ்யரீதியாக மூன்றுஅர்த்தம், அதாவது— **अथ शब्दो मङ्गलार्थः अधिकारानन्तर्यार्थश्च** என்று ஸ்பஷ்டமாக எழுதியிருப்பதை தானும் எழுதிக்கொண்டே ,,முழுப் பூஷணிக்காயை சோற்றில் மறைப்பது'' என்ற பழமொழிபோல் மாத்வபாஷ்யத்தில் மூன்று அர்த்தம் **अथ** சப்தத்திற்குச் சொல்ல வில்லை என்கிருர்.

நான் எழுதியிருக்கும் மங்களச்லோகத்தை வாஸந்திகா பரிணயக்ரந்தத்திலிருந்து எடுத்ததாக தூஷணம் கல்பித்திருக்கி ருர். ஷை புஸ்தகத்திலாவது வேறு எந்த புஸ்தகத்திலாவது ஷை ச்லோகம் இருக்கிறதாவென்பதை ஷைசர்மா அவர்களே தேடிப்பார்த்து தெரிந்துகொள்ளட்டும். **हरिः परतरः** என்கிற இடத்தில் பிரகரணத்தினுல் விஷ்ணு அர்த்தமென்றும், **आनन्तर्य श्रुत्या** கிடைக்கிறதென்றும், **मङ्गलार्थ सूचनया** கிடைக்கிறதென்றும், எழுதுகிருர். **प्रकरणं, श्रुति, सूचनम्** இது மூன்றுக்கும் சாஸ்திரத் தில் என்ன லக்ஷணம் சொல்லியிருக்கிறதென்பதையும் அறியா

மல் எழுதியிருக்கிறார். ஸ்பஷ்டமாக மூன்று அர்த்தத்தையும் எழுதி மூன்று அர்த்தத்துக்கும் ப்ரமாணம் எழுதியிருக்கிற இடத்தில் ஸூசனம் எப்படி என்பதை பண்டிதர்கள் யோசிக்க வேணும். ஆதுநிகர்களால் எழுதப்பட்ட **श्रीमन् मध्वमते हरिः परतरः** என்கிற இடத்தில் பிரகரண லக்ஷணம் இருக்கிறதாவென் பதையும் யோஜிக்கவும்.

**श्रुत्या आनन्तर्थं अर्थं** என்றும், **सूचनया** மங்களம் அர்த்தம் என்றும் சொல்லுகிற மாத்வமதஸ்தர்களை **मध्वादिष्वसंभवादन-धिकारं जैमिनिः** என்கிற வியாஸஸூத்ரத்திலும்ச்ருதியால் ஸூத்ரத்துக்கு மதுவித்யாவிசாரம் அர்த்தம் என்றும், ஸூசனையால் மாத்வாளுக்கு ப்ரும்மவித்தையில் அதிகாரமில்லை என்று சொல்லலாமா ? என்பதையும் பண்டிதர்களும் மற்றவர்களும் யோஜிக்கும்படி வரும்.

**द्व्यर्थः अर्च्द्वयं** என்கிற பதங்களை அபசப்தம் என்று வியாகரணமகாபாஷ்யாதி கிரந்தங்கள் அறியாமையால் எழுதியிருக்கிறதாகத் தெரிகிறது. **द्व्यर्थःपचिः** இதுமுதலான பாஷ்யப்ரமாணங்களையும் அறியவில்லை.

சர்மா அவர்கள் எழுதியதை முழுக்கப்பார்த்ததில் ஸ்வாசார்ய பக்தியைமாத்திரம் முன்னிட்டு சாஸ்திரமில்லாமல் ப்ரகிருதஉபயோகமில்லாததையும் ஏதோ ஸ்வகோஷ்டியைத் திருப்தி செய்ய பதிலெழுதினதாகமாத்திரம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. நான் எழுதின பூர்வபக்ஷத்திற்கு உத்தரமில்லை. ஆனால் சர்மா அவர்கள் நவமாஷ்டகத்தைப் பூர்ணமாக அத்யயனம் செய்து பாரங்கதராகயிருப்பதாகஅவர் எழுத்திலிருந்துநன்றாய்த் தெரியவருகிறது.

ஆனாலும் ஏற்கனவே சர்மா அவர்களுக்கு நான் **सतां सद्भिः सङ्गः कथमपि हि पुण्येन भवति ।** என்று எழுதி விவாதத்தை நிறுத்திக்கொள்ளவேணும், பாஷ்யகாராளிடத்தில் நாம் இருவரும் அபசாரப்படவேண்டாமென்றுஎழுதியிருந்தும் விவாதத்தை பலாத்காரேண இழுத்து, ஸமாதானம் ஸரியானபடியில்லாததால் நிந்தையுடன் முடித்தும் **,शेषं कोपेन पूरयेत्** என்கிற நியாயப்படி

செய்துவிட்டார். இத்துடன் நானும் ஷெடி யாருக்குப்பதில் எழுதுவதை நிறுத்திக்கொள்கிறேன்.

अज्ञस्सुखमाराध्यः सुखतरमाराध्यते विशेषज्ञः ।
ज्ञानलवदुर्विदग्धं ब्रह्मापि नरं न रंजयति ।
इति भर्तृहरेरुक्ति र्नागराजे विराजते ।
शास्त्रज्ञानाणुरिक्तोऽपि वाचाटो बहु निन्दति ॥
शब्दापशब्दविज्ञानं भाष्यज्ञानं च तस्य न ।
नवमाष्टकपाठे तु तद्ज्ञानं भ्राजते भृशम् ॥
आनन्तर्ये प्रधानार्थः मङ्गलार्थश्च सूचनात् ।
इतिशर्मोक्तरीतिस्तु प्रतिबन्ध्या निरस्यते ॥
मध्यादिष्विति सूत्रेऽपि मधुविद्याप्रधानतः ।
सूच्यार्थोपिच माध्वानां ब्रह्मविद्यां निषेधतु ॥

சில ஸயூத்யர்கள் மாத்வமதத்தில் பிரவேசித்து கண்டனம் எழுதுவது ஸரியல்லவென்று நினைக்கலாம். மத்வபாஷ்யடீகா தத்வப்ரகாசிகா முதலிய கிரந்தங்களில் பார்த்தால் அதில் **अधिकरणसारावली** ச்லோகங்களை எடுத்து அத்வைத க்ரந்தங்களைத் தூஷிப்பதுபோலவே தூஷித்திருப்பதைக்காணலாம்.

यथा शक्ति निगृह्णीयात् देवता गुरु निन्दकान् ।

„அறுப்பதே கருமங்கண்டாய் அரங்கமா நகருளானே"

என்கிற ப்ரமாணங்கள்படி வேதாந்ததேசிகருடைய கிரந்தத்தைத் தூஷிப்பவர்களை நாம் ஏன் கண்டனம் செய்யக்கூடாதென்பதை ஸயூத்யர்களும் அறியவும்.

காளி, வங்கீபுரம் ரங்காசாரியார்,
தாஹுதிகாரி, புதுக்கோட்டை.

---

## வாரவிருத்தாந்தம்.

ரத்நகர்ப்பா. பூமிதேவிக்கு வடமொழியில் இப் பெயர் காரணப்பெயராக அமைந்தது. ரத்நங்கள் நிறைந்திருந்தபோதிலும் அவரவர் புண்யபாபத்திற்கேற்றபடியே இது பயனை அளிக்கும். கோயம்புத்தூருக்கு அருகில் பற்பல கிராமங்களில் பூமிக்குள் இருந்து பற்பல அபூர்வவஸ்துக்கள் கண்டெடுக்கப்பட்டன. ஓர்

இடத்தில் ஸ்வர்ண நாணயமும், மற்றோரிடத்தில் அஸ்தியும், உமி கரியும் கிடைத்தது. கல்மண்டபமும் குழையும் அதில் அபூர்வமான சித்ரவேலையுடன் மெருகு குலையாத பாத்ரமும் கிடைத்ததாம். அதைக்கொண்டு இந்திய நாகரீகத்தை மெச்சுகிறார்களாம். சிலர் நம் நாட்டின் பெருமை மதாபிமானிகளுக்கு இதனால் தெரிய வேண்டியதில்லை. தங்களையும் முன்னோரையும் முட்டாளாக எண்ணி, மேனாட்டாரை தெய்வமாக எண்ணுவோர் ஸந்தோஷப்படட்டும், ஆர்ஷ வாக்கில் ஆஸ்திக்யம் இனியாவது கொள்வாரா?

மானக்கேடு!! தீர்த்தகிரிஎன்ற இடத்தில் ஆலயபூஜை செய்யும் அர்ச்சகர் ஒருவர் தாஸீகமநம் செய்ததோடு ஸ்வர்ணஸ்தேயமும் செய்து ஆலயத்திலே ஸ்திரீஹத்தியும்செய்து அகப்பட்டுக்கொண்டார். உலகம் இருக்கும் ரீதியில் ப்ராம்மணஜாதிக்கே பேரவமானம் இது. தலைகாட்ட வழியில்லை. ப்ரஹ்மத்வேஷ பத்திரிகைகளும் நாஸ்திகர்களும் கொக்கரிப்பர், என்செய்வது? எவரது ஆளுகைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல் இந்த ஜாதியே சொல்ல முடியாத பாபங்களைச்செய்து அழியுங்காலம் வந்ததோ என அஞ்சவேண்டி இருக்கிறது. கடவுள் காக்க. சிவத்விஜ வகுப்பினரில் ஆஸ்திகர் பண்டிதர் ஜாத்யபிமானி இல்லாமற்போகவில்லை, உடனே அவர் எழுந்து ஸமூகஸபை கூட்டி அவச்யம்வேண்டிய வேதகாவ்ய ஸதாசாரங்களைக் கற்பிக்கவேண்டும். இத்தகைய ஸஹஜ கார்யங்களை அகற்றவேண்டும். கோவில் அதிகாரிகளாவது தக்க யோக்யதை உள்ளோரைப் பொறுக்கிஎடுத்து பூஜைக்கு அமர்த்தவேண்டும்.

அபாத்ரதானம். தானம் என்பது சிறந்ததர்மம் என உபநிஷத் கீதை முதலியவைகள் போற்றுகின்றன. ஸத்பாத்திரத்தில் நல்லெண்ணத்துடன் ஸத்வஸ்துவை அர்ப்பணம்செய்வதுதான் ஸாத்விகதானம். ஸ்ரீயுதகாந்தி பிறந்ததினக்கொண்டாட்டத்தில் காங்கிரஸிற்கு தானமாக ஒரு நண்பரால் ஸ்ரீஸுப்ரஹ்மண்யஸ்வாமி விக்ரஹம் தானம்செய்யப்பட்டதாம், அது எக்கதியை அடையும் என்பதை ஆஸ்திகர் நாம் சொல்லாமலே அறியலாம். உடனே ஏலம் போடப்பட்டதாம். காங்க்ரஸிற்காகக் கட்டிய சொந்த கட்டடத்தில் இவ் விக்ரஹத்தை ப்ரதிஷ்டைசெய்து பூஜைசெய்யலாகாதா? இவ்வளவு ஆஸ்திக்யமிருந்தால் உடனே ஸ்வராஜ்யமும் கிட்டாதா? பாத்ரமறிந்து பிச்சையிடு,

நாகையிலுமா? நாகப்பட்டணம் பல வருஷகாலமாக ஆஸ்தி கத்திற்கு நாயகமாக விளங்குகிறது. பலஉத்யோகஸ்தர்கள் ஹிந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றிவைத்து பற்பலமத உபன்யா ஸங்களை நடத்திவருகின்றனர். அங்கும் சுயமரியாதைத் தொத்து நோய் தோன்றி சென்றவாரம் ஓர் ஸ்திரீயைத் தலைமை வஹிக்கும் படி செய்து க்ரமப்படியே நிந்தாத்யாயம் நடந்தது. இன்னும் பலமான முயற்சிசெய்து அவர்கள்பேச்சைக் கேட்க அசேதந மான தூண்முதலியவைகளைத்தவிர மற்றவர் இல்லாதபடி தர்மப்ர சாரம் செய்யும்படி ஷை சங்கத்தை வேண்டுகிறோம், கரும்பையே கசக்குவது ஸஹஜம்.

பழையது என்றதால் சிறந்ததா? தங்களுக்கு வேண்டுமானால் புராணாதிகளில் இருப்பதாகக் கூறி தற்கால அநாசாரத்தை ஆத ரிப்பது தற்காலத்தவருக்கு வெகு ஸஹஜமாகிவிட்டது. சாஸ்திரங் களில் எந்தவிடத்தில் எதற்காகஎக்கருத்துக்கொண்டு அதுசொல்லி இருக்கிறதென்பதை அறிவதில்லை, பிறரை ஏமாற்றவே புராணாதி களிலிருந்து ப்ரமாணங் கூறப்படுகிறது. அதை இவர்கள் கூறு வதற்கு ஸாதகமாகவே வைத்துக்கொண்டு பேசுவோம். புராணத் தில் ஓர் வழக்கம் காணப்படின் புராணமென்பதற்காக அதைப் போற்றலாகாது. புதிது என்பதற்காக ஒன்றைத் தூற்றலாகாது. விவேகி பகுத்தறிவுடன் ஸத்தை ஏற்பான் என்றார் கவிகுல திலக மாம் காளிதாஸன். புராணாசாரமென ஸதாசாரத்தைஏற்கலாகாதா? தென்னாற்காடுஜில்லா போர்ட் ஸபையில் குடியை ஆதரித்து ஒரு அங்கத்தினர் புராணகாலத்திலே குடி இருக்கிறது ஆதலால் அதை ஆதரிக்கவேண்டுமென்கிறார். குடி சூதாடல் பிறர் மனைவியை அபஹரித்தல் பொய் முதலிய பலவும் அங்கு காணப்படுகிறது. இவர் தன் ஆளுகை உள்ள இடத்தில் இதை ப்ரசாரம்செய்வார் போலும். இத்தகைய அங்கத்தினரால் வரும்பயன் இவ்வளவே தான். தக்கோரைத் தேர்ந்தெடுப்பது தர்மம். அநாசாரங்களால் வரும் தீங்கை கதைகளால் காட்டி அதைச்செய்யாதே என புராணங்கூற விபரீதமாக தன்னைக் கொல்லவரும் சத்ருவை அடிக்கக் கொடுத்தடியால் தன்னைத்தானே அடித்துக்கொண்டு திருடர்கையிலுங் கொடுத்து அடிபடும் விவேகத்திற்கென்செய் வது? யாரைநோவது? நாகரீகமே! நீ தான் வழி சொல்ல வேண்டும்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.